# ஆர்.எம்.கே. மஞ்சுளா முனிரத்தினம் நினைவு கிரிக்கெட் போட்டி: லயோலா கல்லூரி அணி சாம்பியன்

## தலைவர் ஆர்.எஸ்.முனிரத்னம் பரிசு வழங்கினார்




**பொன்னேரி, ஏப். 18–**

**கவரைப்பேட்டை ஆர்.எம்.கே கல்லூரியில் பொறியியல் நடைபெற்ற ஆர்.எம்.கே மஞ்சுளா முனிரத்தினம் நினைவு கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற லயோலா கல்லூரிக்கு ஆர். எஸ். முனிரத்னம் பரிசு வழங்கி பாராட்டினார்.**

திருவள்ளூர் மாவட்டம் கவரைப்பேட்டையில் உள்ள ஆர்எம்கே பொறியியல் கல்லூரியில் 14ஆம் ஆண்டு ஆர்.எம்.கே மஞ்சுளா முனிரத்தினம் நினைவு சுழற்கோப்பைக்கான கிரிக்கெட் போட்டி கடந்த 5 நாட்களாக நடைபெற்றது. கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் தமிழ்நாடு முழுவதும் இருந்து பொறியியல் கல்லூரிகளை சேர்ந்த 16 அணிகள் பங்கேற்றன. பல்கலைக்கழக அணிகளுக்கும் போட்டியில் பங்கேற்க வாய்ப்பு வழங்கப்பட்டது. அதன்படி எஸ்ஆர்எம், சந்தியாபாமா உள்ளிட்ட முக்கிய பல்கலைகழக அணிகள் கலந்து கொண்டன. போட்டிகள் அனைத்தும் நாக்அவுட் முறையில் நடைபெற்று வந்தன.

இறுதிப்போட்டியில் சென்னை லயோலா பொறியியல் கல்லூரி அணி –கவரைப்பேட்டை ஆர். எம்.கே பொறியியல் கல்லூரி அணிகள் மோதின. டாஸ் ஜெயித்த லயோலா அணி பேட்டிங் தேர்வு செய்தது. விறுவிறுப்பாக நடந்த இந்த ஆட்டத்தில் முதலில் ஆடிய லயோலா அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட்டுகளை இழந்து 157 ரன்கள் எடுத்தது. பின்னர் ஓவருக்கு 168 ரன் என்ற இலக்குடன் களமிறங்கிய ஆர்.எம்.கே அணி 20 ஓவரில் ஆறு விக்கெட் இழப்புக்கு 123 ரன்களை மட்டுமே எடுத்தது. 35 ரன் வித்தியாசத்தில் லயோலா பொறியியல் கல்லூரி அணி சாம்பியன் கோப்பையை தட்டிச்சென்றது.

பரிசளிப்பு விழாவில் ஆர்எம்கே கல்வி குழுமங்களின் தலைவர் ஆர். எஸ்.முனிரத்னம் வெற்றிபெற்ற லயோலா கல்லூரி அணிக்கு சாம்பியன் சுழற்கோப்பையை பரிசாக வழங்கினார். இரண்டாம் இடம் பிடித்த ஆர்.எம்.கே கல்லூரி அணிக்கு ரன்னர் அப் கோப்பை வழங்கப்பட்டது. மேலும் தொடர் நாயகன், சிறந்த பேட்ஸ்மேன், சிறந்த பந்து வீச்சாளர் விருதுகளும் வழங்கப்பட்டன. இதில் கல்விக்குழுமங்களின் துணைத்தலைவர் ஆர்.எம்.கிஷோர், ஆலோசகர் எம்.எஸ்.பழனிசாமி, கல்லூரி முதல்வர்கள் முகமது ஜுனைத் என்.அன்புசெழியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

# அகர்வால் கண் மருத்துவமனையின் மருத்துவர் சூசன் ஜேக்கப்: உலக பிரபல கண் மருத்துவர்களில் ஒருவராக மீண்டும் தேர்வு

## சேர்மன் டாக்டர் அமர் அகர்வால் பாராட்டு

சென்னை, ஏப் 18–

கண்புரை மற்றும் ஒளிவிலகல் அறுவை சிகிச்சையில் உலகளாவிய முதல் 10 நிபுணர்களில் ஒருவராக டாக்டர். அகர்வால்ஸ் கண் மருத்துவமனையின் மூத்த பெண் டாக்டர். சூசன் ஜேக்கப் தேர்வு செய்யப்பட்டள்ளார்.

கண் மருத்துவத் துறையில் முன்னோடிகளான நிபுணர்களை அங்கீகரித்துக் கொண்டாடும் 'ஆப்தால்மாலஜிஸ்ட் பவர் லிஸ்ட்' நடப்பு ஆண்டில் இடம்பிடித்த 3 இந்தியர்களில் ஒருவராக டாக்டர். சூசன் ஜேக்கப் பெருமை சேர்த்திருக்கிறார்.

இந்த மதிப்புமிக்க வருடாந்திர தரவரிசை பட்டியல் கண் மருத்துவத்தில் உலகின் மிகவும் ஊக்கமளிக்கும் மற்றும் செல்வாக்கு மிக்க முதல் 50 தலைவர்களை அடையாளப்படுத்தி அங்கீகரிக்கிறது.

கண் மருத்துவ வியலில் கவுரவமிக்க சர்வதேச பவர்லிஸ்ட் பட்டியலில் டாக்டர். சூசன் ஜேக்கப் பெயர் இடம்பெற்றிருப்பது



டாக்டர். சூசன் ஜேக்கப்

இது 4வது முறையாகும் என்று மருத்துவமனையின் சேர்மன் அமர் அகர்வால் தெரிவித்தார்.

ஒளி விலகல் அறுவை சிகிச்சை மேம்பட்ட விழித்திரை மாற்று அறுவை சிகிச்சைகள், சிக்கலான கண்ணின் முன்பக்க புனரமைப்புகள், கண் அழுத்த நோய் மற்றும் சிக்கலான கண்புரைகளுக்கான சிகிச்சையில் 25 ஆண்டுகளுக்கும் மேலாக அனுபவத்தையும், நிபுணத்துவத்தையும் பெற்றவராக டாக்டர். சூசன் ஜேக்கப் திகழ்கிறார். விழித்திரை, கண்புரை, கண் அழுத்த நோய் மற்றும் கூம்பு விழிப்படலம் ஆகிய பிரிவுகளில் அவரது பல புத்தாக்க செயல்பாடுகளுக்காக அவர் உலகெங்கிலும் மதிக்கப்படுகிறார்.

டாக்டர். சூசன் ஜேக்கப் சாதனையை பாராட்டிய டாக்டர்.அகர்வால்ஸ் கண் மருத்துவமனை குழுமத்தின் தலைவர் அமர் அகர்வால் கூறுகையில், "கண் மருத்துவத்தில் உலகின் சிறந்த நிபுணர்களில் ஒருவராக அவருக்கு வழங்கப்பட்டிருக்கும் அங்கீகாரம் எங்கள் அனைவருக்கும் பெருமைக்குரிய தருணமாகும். டாக்டர். சூசன் ஜேக்கப், அறுவை சிகிச்சை கண் மருத்துவத்தில் புரட்சிகர பங்களிப்புகளை வழங்கியிருக்கிறார் என்றார்.

### தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழகம் சார்பில்

# பிடாகம் கிராம ஊராட்சி பள்ளி மாணவர்களுக்கு 'சைபர்' பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்



விழுப்புரம், ஏப். 18–

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழகத்தின் *School of Excellence in Law*ன் முதுகலை மாணவர்கள், சமூகப் பொறுப்புணர்வின் ஒரு பகுதியாக, விழுப்புரம் மாவட்டம், பிடாகம் கிராமடத்தில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் உள்ள மாணவ மாணவியருக்கு, சைபர் குற்றங்கள் மற்றும் சைபர் பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம் நடத்தினர்.

இந்த முகாமில், பள்ளி மாணவர்கள் எதிர் கொள்ளகூடிய சைபர் குற்றங்கள், ஆன்லைன் மோசடிகள், சமூக ஊடக தவறான பயன்பாடு, பிரைவேசி மீறல்கள், ஈமெயில் மற்றும் மெசேஜ் மோசடிகள் உள்ளிட்டவை குறித்து விரிவான விளக்கங்கள் வழங்கப்பட்டன.

மேலும், இதுபோன்ற செயல்களை தடுக்க மாணவர்கள் எவ்வாறு தங்களை பாதுகாத்துக்கொள்ள வேண்டும், எந்தளவுக்கு தகவல்களை பகிர வேண்டும் மற்றும் எப்போது பெரியவர்களிடம் உதவி கேட்க வேண்டும் என்பதற்கான வழிகாட்டுதலும் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வானது மாணவர்களின் தொலைநோக்குப் பார்வை, தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்பு முக்கியத்துவம் ஆகியவற்றைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழகத்தின் சைபர் பிரிவு பேராசிரியர் ரஞ்சித் ஓமன் ஆப்ரஹாம் மற்றும் உதவி பேராசிரியர் எஸ். டி.சுனிதா ராய், ஆலோசனையின் படி முதுகலை மாணவர்கள் தமிழரசன், சுவாதி, ஆகாஷ் மற்றும் சம்ருத்தா ஆகியோர் சிறப்பாக செய்தனர்.

# இருதயக் குறைபாடோடு பிறந்த 1 வயது குழந்தைக்கு ஐஸ்வர்யா மருத்துவமனையில் ஆபரேஷன் வெற்றி

**சென்னை, ஏப் 18–**

**பிறவி இருதயக் குறைபாடுடன் பிறந்த ஒரு வயது குழந்தைக்கு சென்னை ஐஸ்வர்யா மருத்துவமனையில் வெற்றிகரமான இதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.**

குழந்தை தற்போது நலமுடன் ஆரோக்கியமாக உள்ளது என்று நிர்வாக இயக்குனர் டாக்டர் அருண் முத்துவேல் மற்றும் மூத்த இருதய ஆபரேஷன் நிபுணர் டாக்டர் எஸ். முத்துகுமரன் தெரிவித்தனர்.

பிறக்கும்போதே இருதயப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டு இருந்த இந்தப் பெண் குழந்தை 6 கிலோ எடையில் இருந்தது. ஆக்சிஜன்குறைந்த அரிய வகை நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைக்கு ஐஸ்வர்யா மருத்துவமனையின் மூத்த இருதய அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர். எஸ். முத்துக்குமரன் மற்றும் மூத்த இருதய மயக்க மருந்து நிபுணர் டாக்டர் ஆர். எஸ். சந்தீப் ஆகியோர் தலைமையான மருத்துவர் குழு அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக



டாக்டர் எஸ். முத்துகுமரன்

செய்தது. இந்த அறுவை சிகிச்சை சுமார் 4 மணி நேரம் நடைபெற்றது.

இக்குழு இருதயக் குறைபாடுகளைச் சரிசெய்யவும், நுரையீரலுக்கு ரத்த ஓட்டத்தை மேம்படுத்தவும், ஆக்சிஜன் நிறைந்த ரத்தம் ஓட்டத்தை உறுதி செய்யவும் உடனடியாக அறுவை சிகிச்சையை மேற்கொண்டது. இது பொதுவாக கீழ் இருதய அறைகளுக்கு இடையே உள்ள துளையை ஒட்டுதல் மற்றும் நுரையீரலுக்கு ரத்தம் வெளியேறும் பாதையை விரிவுபடுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இந்த அறுவை சிகிச்சைக்கு பின் குழந்தையின் உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது.

இது குறித்து இம்மருத்துவமனையின் மூத்த இருதய அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர். எஸ். முத்துக்குமரன் ''ஆபரேஷனுக்கு பிறகு எந்த பயமும் வேண்டாம். இது நீண்டகால ஆரோக்கியம் மற்றும் வளர்ச்சிக்கு சிறப்பானதாக இருக்கும். குழந்தையின் ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு இந்த அறுவை சிகிச்சை மிகவும் முக்கியம்'' என்று தெரிவித்தார்.

இது குறித்து இம்மருத்துவமனையின் மக்கள் தொடர்பு அதிகாரியும் மருத்துவர் உதவியாளருமான சாரதா அகிலாமணி கூறுகையில், அறுவை சிகிச்சைக்கு பின் அந்த குழந்தையின் உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. இதற்காக எங்கள் மருத்துவர் குழு சிறப்பாக பணியாற்றி அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக செய்து முடித்துள்ளது என்று தெரிவித்தார்.

மருத்துவமனையின் நிர்வாக இயக்குனர் டாக்டர் அருண் முத்துவேல் கூறுகையில், குழந்தைகளுக்கான இதய அறுவை சிகிச்சை துறை என்பது மிகவும் சிறப்பு வாய்ந்த துறையாகும், மேலும் இந்த அறுவை சிகிச்சையின் வெற்றி என்பது இருதய நோய் நிபுணர்கள், அறுவை சிகிச்சை நிபுணர்கள், மயக்க மருந்து நிபுணர்கள் மற்றும் தீவிர சிகிச்சை நிபுணர்கள் உள்ளிட்ட பல மருத்துவ குழுக்களின் ஒத்துழைப்பைச் சார்ந்துள்ளது. இந்த வெற்றிகரமான அறுவை சிகிச்சை, குழந்தைகளுக்கான இருதய பராமரிப்பு மற்றும் ஐஸ்வர்யா மருத்துவமனையின் நவீன மேம்படுத்தப்பட்ட மருத்துவ நுட்பங்களை எடுத்துக்காட்டுகிறது, பிறவி இருதய பாதிப்பு உள்ள குழந்தைகளுக்கு உலகத்தரம் வாய்ந்த சிகிச்சைகள் எங்கள் மருத்துவமனையில் வழங்கப்படுகிறது என்று தெரிவித்தார்.



**சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் பிறந்தநாளில் கிண்டியில் அமைந்துள்ள அவரது சிலைக்கு சமத்துவ மக்கள் கழக நிறுவன தலைவர் எர்ணாவூர் நாராயணன் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் மாநில பொருளாளர் கண்ணன், வடசென்னை மேற்கு மாவட்ட செயலாளர் வில்லியம்ஸ், காஞ்சிபுரம் மாவட்ட செயலாளர் ஸ்ரீராம், ஆர்.கே.நகர் பகுதி செயலாளர் ராஜேஷ், வடசென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி செயலாளர் மாசிலாமணி, மாவட்ட துணை செயலாளர் தாஸ், ராயபுரம் பகுதி பொருளாளர் சங்கரபாண்டியன் ஆகியோர் உள்ளனர்.**

# அண்ணாமலைப் பல்கலைக்கழக அறிவியல் துறை சார்பில் 2 நாள் பயிற்சிப் பட்டறை




சிதம்பரம், ஏப். 18–

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் MYASAU–ன் கீழ் மையமாகச் செயல்படும் விளையாட்டு நடத்தப்பட்ட "மேம்பட்ட மீள் ஒட்டும் தடகள டேப்பிங் (கினீசியோ)" என்ற தலைப்பில், இரண்டு நாள் பயிற்சி பட்டறை நடைபெற்றது.

ஜெய்ப்பூரில் உள்ள FDPJVUW புல முதல்வர் பேராசிரியர் (டாக்டர்) அங்கித் பார்கவா கினீசியோ டேப்பிங் நிபுணர், இந்தியா முழுவதிலுமிருந்து 50 மேற்பட்ட பங்கேற்பாளர்களுக்கு அறிவியல் மற்றும் நடைமுறை தொடர்பான அமர்வை நடத்தினார்.

அறிவியல் புல முதல்வர் டாக்டர் எஸ். ஸ்ரீராம் சான்றிதழ்களை வழங்கினார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் விளையாட்டு அறிவியல் துறையின் MYASAU இயக்குனர் டாக்டர் எம்.ஏ. ஹாசன் நிறைவு விழாவிற்குத் தலைமை தாங்கினார், முடிவில் டாக்டர் பி. சுதீஷ் நன்றி கூறினார்.

---

**சென்னை உயர்நீதிமன்றம்**
**(உயில் மற்றும் உயில் இல்லாத வழக்கு பற்றிய ஆள்வரை)**
**முதலேற்பு மனு எண். 826/2024**

இந்திய வாரிசுரிமைச் சட்டம் டடடட/1925 தொடர்பான மனுவில் 31.10.2008 அன்று இறந்து போன பூங்காவனம் அவர்களின் உயில் சொத்துக்கள் தொடர்பான மனு

பூ. குமரகுருதாசன்
த/பெ. லேட் S. பூங்காவனம்
எண்.537, T.V.K.நகர், 10வது தெரு,
செம்பியம், சென்னை–600 011 – மனுதாரர்

எதிர்

1) கே. புவனேஸ்வரி, க/பெ. கே.காசி
எண்.4, 5வது அண்ணாவீதி, எம்.ஜி.ஆர்.நகர்,
சென்னை–600 078
2) P. சிவசங்கரன், த/பெ. லேட் S. பூங்காவனம்
எண்.25/3, காயிதே மில்லத் தெரு, ஆசாத் நகர்,
அமிஞ்சிகரை, சென்னை –எதிர்மனுதாரர்கள்

சென்னை – 600 039, செம்பியம், 10வது தெரு, T.V.K.நகர், எண்.537 என்ற முகவரியில் வசித்து வந்து 31.10.2008 அன்று இறந்து போன பூங்காவனம் அவர்களின் உயில் சொத்துக்கள் தொடர்பான மனு சென்னை உயர்நீதிமன்ற மாஸ்டர் கோர்ட்டில் 28.04.2025 அன்று காலை 10.30 மணிக்கு விசாரணைக்கு வருகிறது. மேற்படியாரின் உயில் சொத்துக்களில் ஏதேனும் பாத்தியதை கோருகின்ற அனைவரும் தங்களுக்கு தக்கதெனக் கருதினால் நீதிமன்றம் நிர்வாகச் சான்றிதழ் வழங்கப்படுவதற்கு முன்பு மேற்படி நடவடிக்கைகளை பார்த்து தங்களது ஆட்சேபணைகளைத் தெரிவித்துக்கொள்ளுமாறு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறார்கள்.

2025ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9ம் தேதி சென்னையில் கையொப்பமிடப்பட்டது.

| | |
|---|---|
| **ஆ. சரவணன்** | **S. கண்ணன்** |
| **மனுதாரரின் வழக்கறிஞர்** | **உதவி பதிவாளர்** |
| **பைஸ் லோபோ & அல்வாரெஸ்** | **முதலேற்பு பிரிவு–I** |
| **வழக்கறிஞர் அலுவலகம்,** | **உயர்நீதிமன்றம்** |
| **கத்தோலிக்க மைய இணைப்பு,** | **சென்னை– 600 104** |
| **எண்.64, அரண்மனைக்கார தெரு,** | |
| **சென்னை– 600 001,** | |
| **செல்: 7845178119** | |

## PUBLIC NOTICE

This is to put the General Public in notice that, my client, D. RAVI, S/o. Late. Govindaswamy, residing at No. 28-112/6D, Vasavi Nagar, Puttur, 517583, which is morefully described in the schedule herein from M. Devaraj, s/o. Murugesa Naicker, residing at No. 12/9, 9th Street, Ragupathy Nagar, Pazhavanthangal, Tamil nadu – 600 114, who having acquired the same, by virtue of a sale deed dated 14-12-1989, registered as Doc. No. 2865/1989, in the office of the SRO Manavala Nagar.

I on behalf of my client, hereby causes this paper publication to secure the interest/right over the Schedule property, to identify whether all/any person/persons, entities/ Including individual/Hindu Undivided Family/ Company /Bank /Banks/Financial Institutions/ firm/An Association of persons or a Body of Individuals whether incorporated or not/Lenders and or creditors/ having any benefits/ title/ claims/ objections/demand/ or rights or interest in respect of the Intended sale /Mortgage of the schedule property or any part thereof by way of inheritance/sale transfer, share/ mortgage/ pledge, charge/ lease/ lien/ license assignment/ tenancy/ gift/ exchange/ encumbrance/ family arrangement/ settlement/ bequeath/ succession/ maintenance/ easement/ trust/ possession/ decree or order of any court of law/contracts/ agreements, development rights/partnership/right of way/power of attorney he/she/they may contact the undersigned with documentary proof substantiating his/her/ their objection/ claims/ interest/details of dispute within 7 days from the date of publication of this Notice/ Publication, failing which my client will proceed, as if there is no third party claims/ objections/disputes/ charge or encumbrance whatsoever on the schedule mentioned property and any subsequent claim/dispute/objections shall be deemed to have been waived and will not be binding and enforceable on my client.

**SCHEDULE OF THE PROPETY**

All that piece and parcel of Vacant House site bearing Plot No. 5, Kumaran Nagar, Ettiappa Naicker Street, Manavala Nagar, Thiruvallur – 602 002, land measuring to an extent of 2440 sq.ft., Comprised in Old Survey No. 370/9, as per patta No. 8508, New Survey No. 370/46, of Vengathur Village, Thiruvallur Taluk, Thiruvallur District, Chennai district, and bounded on the :

North by - Road and Plot No. 4
South by - Survey No. 370/11
East by - Survey No. 370/10, 370/12
West by - Plot No. 5A

**AD-MEASURING**

East to West on the Northern side - 48.9 feet
East to West on the Southern side - 37.6 feet
North to South on the Eastern side - 57.6 feet
North to South on the Western side - 55 feet

This property situated within the Registration District of Thiruvallur and Sub Registration District of Manavala Nagar.

**V. KAMAL, ADVOCATE**
New No. 224, Old No. 209, Linghi chetty Street,
2nd Floor, Parrys Chennai – 600 001.
Cell: 9551282833

---

## தி ராம்கோ சிமெண்ட்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 'ராமமந்திரம்', ராஜபாளையம்–626 117.
கார்ப்பரேட் அலுவலகம்: ''அவ்ராஸ் கார்ப்பரேட் சென்டர்'', 5வது தளம்,
எண். 98–ஏ, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை, மயிலாப்பூர், சென்னை–600 004.
Ph.: 044-28478666 Fax: 044-28478676 E-Mail: investorrelations@ramcocements.co.in
CIN : L26941TN1957PLC003566; Website : www.ramcocements.in

**பங்குதாரர்களுக்கு அறிவிப்பு**

**டிவிடெண்ட் கோரப்படாமல் உள்ள பங்குகளை முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதிக்கு (ஐஇபிஎப்) மாற்றம் செய்தல்**

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 124(6)ன்படி, தொடர்ந்து 7 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேலாக செலுத்தப்படாத அல்லது கோரப்படாத டிவிடெண்ட் உள்ள பங்குகள் கம்பெனியினால் ஐஇபிஎப்–க்கு மாற்றப்படும்.

இதன்படி, தொடர்ந்து ஏழு ஆண்டுகள் அல்லது அதற்கு மேலாக டிவிடெண்ட் கோரப்படாமல் உள்ள பங்குகளை ஐஇபிஎப்–க்கு மாற்ற கம்பெனி திட்டமிட்டுள்ளது.

தொடர்ந்து ஏழு ஆண்டுகள் அல்லது அதற்கு மேலாக டிவிடெண்ட் கோரப்படாமல் உள்ள பங்குகளை வைத்துள்ள பங்குதாரர்கள் விரைவாக டிவிடெண்டை கோரிப் பெறுவதற்கு அறிவுரை வழங்கும் வகையில் பங்குதாரர்களுக்கு தனித்தனியே அறிவிப்புகளை பதிவுத்தபால் மூலம் கம்பெனி 17.04.2025 அன்று அனுப்பி உள்ளது.

முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் (கணக்கு வைப்பு, தணிக்கை, பரிமாற்றம் மற்றும் திருப்பி அளித்தல்) விதிகள் 2016ன் விதி 6(3)ன்படி, பங்குதாரர்களின் தகவலுக்காகவும், அவர்கள் மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பங்குதாரர்களின் விவரங்கள் மற்றும் மாற்றப்பட உள்ள பங்குகளின் விவரங்கள் அடங்கிய அறிக்கை கம்பெனியின் இணையதளம் www.ramcocements.in–ல் உள்ளது.

ஆகஸ்ட் 2, 2025 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ டிவிடெண்ட் பெறுவதற்காக செல்லத்தக்க கோரிக்கை ஏதும் பெறப்படாதபட்சத்தில், அந்த டிவிடெண்ட் கோரப்படாமல் உள்ள பங்குகள் செப்டம்பர் 1, 2025 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ விதிகளின்படி ஐஇபிஎப்–க்கு மாற்றப்படும்.

கம்பெனிகள் சட்டம், 2013ன் பிரிவு 124(6) மற்றும் ஐஇபிஎப் விதிகளுக்கு இணங்க, பங்குகள் ஐஇபிஎப்-க்கு மாற்றப்படும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் நிறுவன செயலாளரிடம் ஒரு உரிமைக் கடிதத்தை வழங்குவதற்கான கோரிக்கையை வைப்பதன் மூலம் அதைக் கோர உரிமை உண்டு. அதைப் பயன்படுத்தி, பங்குதாரர்கள் இந்திய அரசின் கார்ப்பரேட் விவகார அமைச்சகத்தின் இணையதளம் www.mca.gov.inல் கிடைக்கும் படிவம் எண்: ஐஇபிஎப்-5ல் ஆன்லைன் விண்ணப்பத்தை தாக்கல் செய்யலாம்.

**தி ராம்கோ சிமெண்டஸ் லிமிடெட்டிற்காக**

| | |
|---|---|
| **இடம்: சென்னை** | **கே. செல்வநாயகம்** |
| **தேதி : 17.04.2025** | **செயலாளர்** |

---

## ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்.

பதிவு அலுவலகம் : 501, சல்கான் ஆரம், ஜசோலா மாவட்ட மையம், புதுடெல்லி –110025. **CIN : U65900DL2020PLC366027**

### ஏல அறிவிப்பு

வங்கியினால் வழங்கப்பட்ட தனிப்பட்ட அறிவிப்புகள் உட்பட பல்வேறு கோரிக்கைகள் மற்றும் அறிவிப்புகள் அனுப்பியபோதிலும், வங்கியிடமிருந்து பெற்ற தங்க நகை கடன்/கள் அவர்களால் சரி செய்யப்படவில்லை என்பதை ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்டின் கீழ்க்கண்ட கடன்தாரர்களுக்கு இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். வங்கியில் செக்யூரிட்டியாக வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளை ஏலம் விட முடிவு செய்யப்பட்டுள்ளது, அதன்படி காலை 11.00 மணிக்கு கடன் பெற்ற கிளை வளாகத்தில் ஏலம் விடப்படும் என்று அனைத்து கடன்தாரர்களுக்கும் இதன் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி கடன் வாங்கியவர்கள், கணக்கு வைத்திருப்பவர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட அனைவரும் ஏலத்தில் பங்கேற்கலாம்.

**ஏல தேதி 28 ஏப்ரல், 2025 அன்று காலை 11.00 மணி**

| வ. எண். | கிளை | கணக்கு எண் | கணக்கு வைத்திருப்பவர் பெயர் |
|---|---|---|---|
| 1 | சென்னை | 104142511543 | விக்னேஷ் முருகன் |
| 2 | சென்னை | 104142511436 | ப்ரீத்தி எஸ் |
| 3 | சென்னை | 104142511418 | ஜி உமா லக்ஷ்மி |
| 4 | சென்னை | 104142511492 | சுருளி கே சி |
| 5 | சென்னை | 104142511535 | சுருளி கே சி |
| 6 | சென்னை | 104142511432 | உமாதேவி ஆர் |
| 7 | சென்னை | 104142511306 | கோபு கே ஆர் |
| 8 | சென்னை | 104142511315 | பிரமோத் எப் |
| 9 | சென்னை | 104142511451 | ஆர் ரகு |
| 10 | சென்னை | 104142511452 | கீதாஞ்சலி ஏ |
| 11 | சென்னை | 104142511528 | வி ஜே பிரபாகர் |
| 12 | சென்னை | 104142511515 | அருள் டி எஸ் |
| 13 | சென்னை | 104142511517 | எச் அன்சாரி |
| 14 | சென்னை | 104142511530 | சுதாகர் வி |
| 15 | சென்னை | 104142511534 | சதீஷ் ஜி |

எந்தவொரு முன்னறிவிப்பும் இன்றி ஏலத்தில் இருந்து எந்தவொரு கணக்கையும் நீக்க அல்லது ஏலத்தை ரத்து செய்ய வங்கிக்கு உரிமை உள்ளது.

**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்.**